6) செ.வெ.எண் : 104 நாள்: 14.08.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 14 .8.2011

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், நரிப்பள்ளி கிராமம், அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயின்று வந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் அருண்குமார் என்ற மாணவன் 12.8.2011 அன்று மாலை பள்ளி வேலை நேரம் முடிந்த பிறகு பள்ளி வளாகத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில் கூடை பந்து விளையாடிக் கொண்டிருந்த போது, வளையத்தில் சிக்கிக் கொண்ட பந்தை எடுக்க முயன்றபோது கம்பம் முறிந்து மாணவன் அருண்குமார் தலையில் விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மாணவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவன் அருண்குமாரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் விளையாட்டு மைதானத்தில் விளையாடும் போது தகுந்த பாதுகாப்போடும், விளையாட்டு உபகரணங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படவும், இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித் துறைக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9